# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 4th Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| **இந்து நாகரிகம் I** <br> **Hindu Culture I** | **Two hours** <br> **Gr -13 (2021)** | **46 T I** |

## பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. வேதங்கள் செவி வழியாகப் பேணப்பட்டு வந்தமையால் வழங்கப்படும் பெயர்?
 1) எழுதாமறை 2) சுயம்பு 3) சுருதி
 4) ஆம்நாயம் 5) நான்மறை

02. சாதாரண மக்களிடையே மாந்திரீக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வேதம் பின்வருவனவற்றுள் எது?
 1) சாமவேதம் 2) அதர்வண வேதம் 3) இருக்கு வேதம்
 4) யசுர் வேதம் 5) பிரம்மவேதம்

03. ஆன்மாவின் இறப்புக்குப் பிற்பட்ட நிலை, ஆன்மாவின் கன்மவினைகள், வினைகளுக்கான பயன்கள் பற்றிய கருத்துக்களை குறிப்பிடும் வேத சூக்தம்.
 1) வருணசூக்தம் 2) நாஸதீய சூக்தம் 3) புருஷசூக்தம்
 4) ஜமசூக்தம் 5) பிரமச்சரிய சூக்தம்

04. "அமரவோரங்க மாதும் வேதமோர் நான்கு மோதி……." எனும் ஆழ்வார் பாடலைப்பாடியவர்?
 1) பேயாழ்வார் 2) பொய்கையாழ்வார் 3) பூதத்தாழ்வார்
 4) நம்மாழ்வார் 5) தொண்டரடிப் பொடியாழ்வார்

05. நால்வகை ஆச்சிரம நிலைகளின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது?
 1) வேதங்கள் 2) ஆகமங்கள் 3) புராணங்கள்
 4) இதிகாசங்கள் 5) தர்மசாஸ்திரங்கள்

06. ரிதஸ்வான் என அழைக்கப்படும் தெய்வம்
 1) இந்திரன் 2) வருணன் 3) அக்கினி 4) சோமன் 5) உருத்திரன்

07. ஆலயக்கிரியைகளின் போது இடம் பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை எவ்வாறு அழைக்கப்படும்?
 1) கர்ஷணம் 2) பிரதிஷ்டை 3) பிராயச்சித்தம் 4) உற்சவம் 5) கொடியேற்றம்

08. ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி குறிப்பிடும் ஆகமம் பின்வருவனவற்றுள் எது?
 1) காரண ஆகமம் 2) காமிக ஆகமம் 3) ரௌரவ ஆகமம்
 4) கிரண ஆகமம் 5) பௌஷ்கர ஆகமம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

09. ஆகமங்கள் கூறும் உருவ வழிபாட்டின் அடிப்படையில் "அண்ணல் அருளில் அருளும் சிவாகமம்............." என்று பாடியவர்?
1) திருநாவுக்கரசர் 2) திருஞானசம்பந்தர் 3) சுந்தரமூர்த்தி நாயனார்
4) காரைக்காலம்மையார் 5) மாணிக்கவாசகர்

10. "அடுத்ததானை உரித்தானை அர்ச்சுனர்க்குப் பாசுபதம் கொடுத்தானை.........." எனும் தேவாரப் பாடலடியினூடாக வலியுறுத்தப்படும் கதை
1) சிவரகசியம் 2) இராமாயணம் 3) பாரத அம்மானை
4) மகாபாரதம் 5) மார்க்கண்டு

11. தாச மார்க்கத்தில் நின்று முத்தி இன்பம் பெற்றவர்.
1) திருஞானசம்பந்தர் 2) சுந்தரர் 3) மாணிக்கவாசகர்
4) ஸ்ரீகண்டர் 5) திருநாவுக்கரசர்

12. மேல்வருவனவற்றில் "மனச்சாட்சியை விட உயர் தர்மம் எதுவும் இல்லை" என குறிப்பிடும் நூல்
1) திருமுருகாற்றுப்படை 2) கலித்தொகை 3) புறநானூறு
4) அகநானூறு 5) பரிபாடல்

13. பல்லவ மன்னர்களுள் நூலாசிரியனாகவும், கட்டட நிர்மாண சிற்பியாகவும், இசைவல்லுனராகவும் ஓவியனாகவும் சிற்பிக்கப்படும் மன்னன்.
1) மகேந்திரவர்மன் 2) மாமல்லன் 3) பரமேசுவரவர்மன்
4) இராஜசிம்மன் 5) 3ம் சிம்மவர்மன்.

14. பரமேசுவர வர்மனின் ஆழ்ந்த சிவபக்தியை புலப்படுத்துவது?
1) திருச்சிராப்பள்ளி குகைக்கோயில் கல்வெட்டு
2) குடுமியா மலைக் கல்வெட்டு
3) மாமல்ல புரக் கணேசர் கோயில் கல்வெட்டு
4) மண்டகப்பட்டு கல்வெட்டு
5) காஞ்சி கைலாச நாதர் கல்வெட்டு

15. ஐப்பசி சதய நட்சத்திரத்திலே பிறந்தநாள் விழா கொண்டாடும் சோழ அரசன்
1) சிவபாதசேகரன் 2) திருநீற்றுச்சோழன் 3) திரிபுவனச்சக்கரவர்த்தி
4) இராஜராஜசோழன் 5) விஜயாலயசோழன்

16. சோழர் காலத்தில் அம்மன் வழிபாடு சிறப்பாக நடைபெற்ற இடம் கீழ்வருவனவற்றுள் எது?
1) கங்கை 2) தொண்டை மண்டலம் 3) வேங்கிமண்டலம்
4) கடாரம் 5) திருக்காமக் கோட்டம்

17. வடநாட்டில் எழுந்த யோகம், ஞானம் என்பவற்றோடு தென்நாட்டில் எழுந்த பக்தி, சரணாகதி என்பவற்றையும் சேர்த்து அரிய பாடல்களைப் பாடிய பக்திநெறியாளர்
1) கபீர்தாஸர் 2) இராமானந்தர் 3) துளசிதாசர்
4) சைதன்யர் 5) மீராபாய்

18. பிரமசமாஜப் பணிகளுள் பிராமணன் எனும் சஞ்சிகை வெளியிடப்பட்ட ஆண்டு
1) 1825 2) 1820 3) 1828 4) 1823 5) 1829



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

19. இனமத பேதங்களுக்கு அப்பால் உறவுகள் அனைத்தையும் துறந்து விஷ்ணு ஒருவரையே தஞ்சம் எனக்கொண்டு வாழ்ந்தவர்.
1) மீராபாய் 2) துளசிதாசர் 3) கபீர்தாஸர்
4) இராமானந்தர் 5) ஸ்ரீசைதன்யர் ‘

20. விக்கிரமபாகு புரோகிதர்கள் மூலம் வேள்விகளையும் இந்து சமயக் கிரியைகளையும் நடத்தினான் எனக் கூறும் நூல்?
1) மகாவம்சம் 2) கிளிவிடுதூது 3) சூளவம்சம்
4) தீபவம்சம் 5) அன்னம்விடுதூது

21. மேல்வருவனவற்றில் ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் சோதிடம் சார்பாக எழுந்த நூல்
1) கைலாயமாலை 2) கோணேசர்கல்வெட்டு 3) பரராசசேகரம்
4) செகராசசேகரம் 5) சரசோதிமாலை

22. நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதப்பாக்களை ஓதுவித்து பண்ணிசை மரபை வளர்த்த சைவப்பெரியார்
1) சுவாமி விபுலானந்தர் 2) ஆறுமுகநாவலர் 3) விவேகானந்தர்
4) சி.வைதாமோதரம்பிள்ளை 5) சபாரத்தின முதலியார்

23. பல்லவ சோழ மன்னர் காலங்களில் மகாதேவன் கோயில் என அழைக்கப்பட்ட ஆலயம்
1) திருக்கோணேஸ்வரம் 2) முன்னேஸ்வரம் 3) நகுலேஸ்வரம்
4) திருக்கேதீஸ்வரம் 5) பொன்னம்பலவானேஸ்வரம்

24. மேல்வருவனவற்றுள் பௌத்த தூபியை முன்மாதிரியாகக் கொண்டு மிக அகலமான தளத்தின் மேல் அமைக்கப்பட்ட சிகரக்கோயில்
1) விதர்கோன் மட்டளி 2) பட்டாரி மகாதேவன் 3) தியோகதசாவதாரக்கோயில்
4) நச்சனாகுடாசிவன் கோயில் 5) முகுந்தன் கோயில்

25. “யாழும் குழலும் சீரும் மிடரும் தாழ்குரல் தண்ணுமை ஆடலோடு……..” என குறிப்பிடும் நூல்
1) மணிமேகலை 2) சிலப்பதிகாரம் 3) அற்புதத்திருவந்தாதி
4) திருவிரட்டைமணிமாலை 5) திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்

26. இந்து விக்கிரகக் கலையில் நடராஜ மூர்த்தம் விளக்கும் ஐந்தொழில் தத்துவதத்தில் ஊன்றிய திருவடிவம் குறித்து நிற்பது
1) சிருஷ்டி 2) திதி 3) திரோபவம் 4) சங்காரம் 5) அநுக்கிரகம்

27. “எள்ளில் எண்ணெய் உள்ளடங்கி இருப்பது போலவும், தயிரில் நெய் போலவும், விறகில் தீ போலவும் பிரமதத்துவம் மறைந்துள்ளது” எனக் கூறும் உபநிடதம்?
1) பிருகதாரணிய உபநிடதம் 2) கேன உபநிடதம் 3) பிரசன்ன உபநிடதம்
4) சுவேதாஸ்வர உபநிடதம் 5) கட உபநிடதம்

28. பிரமசூத்திரம், பகவத்கீதை. தசோபநிடதங்கள் என்பவற்றுக்கு உரைநூல்கள் எழுதியவர்.
1) இராமானுஜர் 2) பாதராயணர் 3) சங்கரர்
4) மத்துவர் 5) ஸ்ரீ கிருஷ்ணர்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

29. சமுதாய வாழ்க்கையிலிருந்து பிரிந்து தொலைவிலே நின்ற வேதாந்த தத்துவங்களை மக்களோடு இணைத்து வேதாந்தப் புரட்சி செய்தவர்.
1) இராமானுஜர் 2) சங்கரர் 3) மத்துவர்
4) யாதவப்பிரகாசர் 5) திருக்கோட்டியூர் நம்பி

30. பின்வருவனவற்றுள் "ஒன்றாய் அநேக சக்தியுடையதாய் உடனாய் ஆதி……." எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர்.
1) உமாபதி சிவாச்சாரியார் 2) மெய்கண்டார் 3) அருணந்தி சிவாச்சாரியார்
4) மனவாசகம் கடந்ததேவர் 5) திருவியலூர் உய்ய வந்த தேவர்

31. மெய்கண்ட தேவரால் இயற்றப்பட்ட சிவஞான போதத்தின் ஆறாவது சூத்திரம் குறித்து நிற்பது
1) பசு இலக்கணம் 2) பாச இலக்கணம் 3) பதி இலக்கணம்
4) பதி உண்மைப் பிரமாணம் 5) பசு உண்மைப்பிரமாணம்

32. அருணாசல தேசிகருக்கு "தேசிகர்" என்ற பட்டம் சூட்டி பெருமைப்படுத்திய இராமகிருஷ்ண சங்கத்துறவி.
1) விபுலானந்த அடிகளார் 2) வித்துவான் பூபாலபிள்ளை 3) இராசநாயக முதலியார்
4) அவிநாசாநந்த அடிகள் 5) நவனீத கிருஷ்ண பாரதியார்

33. சிவத்தின் மேல் தெய்வமில்லை சிவஞான சித்திக்கு மேல் ஒரு சாத்திரமில்லை" என சிறப்புப் பெறும் நூல்
1) திருக்களிற்றுப்படியார் 2) திருவுந்தியார் 3) சிவஞானபோதம்
4) சிவஞானசித்தியார் 5) உண்மைவிளக்கம்

34. பிற்காலத்தில் வைதீக மரபுகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் பல தோன்றுவதற்கு அடிப்படையாய் அமைந்தவை.
1) புராணங்கள் 2) ஆகமங்கள் 3) வேதங்கள்
4) தர்மசாஸ்திரங்கள் 5) உபநிடதங்கள்

35. "வித்தியா விநீதன்" எனும் விருதுப்பெயர் கொண்ட அரசன்
1) மாமல்லன் 2) மகேந்திரவர்மன் 3) ஆகமப்பிரியன்
4) இராஜசிம்மன் 5) பரமேசுவரவர்மன்

36. பின்வருவோருள் பிறந்த நாள் தொடக்கம் வைதீக சடங்குகளை பின்பற்றிய மன்னன்
1) மகாசேனன் 2) துட்டகைமுனு 3) இராஜேந்திரன்
4) பராக்கிரமபாகு 5) குளக்கோட்டன்

37. "ஏழிசையாய் இசைப்பயனாய் ……." என்று இறைவனை இசைவடிவமாகப் போற்றியவர்.
1) நாவுக்கரசர் 2) திருஞானசம்பந்தர் 3) சுந்தரமூர்த்தி நாயனார்
4) மாணிக்கவாசகர் 5) காரைக்காலம்மையார்.

38. "எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது" எனக் கூறும் இலக்கியம்
1) வேதங்கள் 2) பகவத்கீதை 3) உபநிடதங்கள்
4) இதிகாசங்கள் 5) தர்மசாஸ்திரங்கள்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

39. அதியமானிடமிருந்து நெல்லிக்கனி பெற்ற பெண்பாற்புலவர்
 1) சோழர்கால ஔவை  2) இடைக்கால ஔவை  3) சமயப்புலவர் ஔவை
 4) சங்ககால ஔவை  5) பிற்கால ஔவை

40. "அவனி நாராயணன்" எனும் விருதுப் பெயர் கொண்ட மன்னன்
 1) நந்திவர்மன்  2) பவவர்மன்  3) சூரியவர்மன்
 4) ஈஸ்வரவர்மன்  5) பூர்ணவர்மன்

❖ **41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குரிய பொருத்தமானவற்றை அட்டவணையின் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A**<br>நிருத்தவிடங்கியர் | **F**<br>விதவைகள் மறுமணம் | **K**<br>யாழ்ப்பாண வைபவமாலை | **P**<br>ஸ்ரீகண்டர் |
| **B**<br>திருமுருகாற்றுப்படை | **G**<br>அவிரோதம் | **L**<br>பாவை நோன்பு | **Q**<br>இராஜராஜசோழன் |
| **C**<br>திருத்தம்பலேஸ்வரம் | **H**<br>தேவரடியார் | **M**<br>வேதாந்த சூத்திரம் | **R**<br>நாட்டார் வழிபாடு |
| **D**<br>பால்ய விவாகத்தடை | **I**<br>காங்கேயன் விக்கிரகம் | **N**<br>சர்வசிவ பண்டிதர் | **S**<br>ஆடி அமாவாசை |
| **E**<br>சரீரக சூத்திரம் | **J**<br>கறைமிடற்றண்ணல் | **O**<br>உத்தர மீமாம்சை சூத்திரம் | **T**<br>மேலைத்தேய கல்வி |

41. சங்ககால சமய நிலையுடன் தொடர்புடையது.
 1) B, H, N , T  2) C, I, N, F  3) B, J, L, R
 4) E, G, M, Q  5) D, F, K, S

42. சோழர் காலத்துடன் தொடர்புடைய தொகுதி
 1) A, J, M, P  2) D, F, M, T  3) C, F, O, T
 4) A, H, N, Q  5) B, F, O, P

43. பிரம்மசமாஜத்துடன் தொடர்புடைய தொகுதி
 1) E, H, M, T  2) D, F, M, T  3) C, F, O, T
 4) D, J, L, R  5) B, F, O, P

44. நகுலேஸ்வர ஆலயத்துடன் தொடர்புடைய தொகுதி
 1) B, I, L, T  2) E, F, M, R  3) C, J, L, Q
 4) D, H, M, P  5) C, I, K, S

45. பிரம்ம சூத்திரத்துடன் தொடர்புடைய தொகுதி
 1) E, G, O, P  2) B, G, N, P  3) E, H, O, R
 4) D, I, M, R  5) C,J, K, T



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

❖ ***46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.***

46. சைவப் புலவர் அருணாசல தேசிகருடன் தொடர்பானது.
   1) 1888 – 1969 வரை மட்டக்களப்பில் வாழ்ந்தவர்.
   2) தேசிகமணி எனும் பட்டத்தை 1954 ல் பெற்றார்.
   3) சைவசமய ஆரம்ப போதினி எனும் நூலை எழுதினார்
   4) பிரசங்கம் செய்வதற்கான மாணவர் பரம்பரையை உருவாக்கினார்.
   5) ஆனைப்பந்தி நூல்நிலையம் அமைக்கும் பணியில் ஏனையவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்.

47. சைவசித்தாந்தம் கூறும் பதி
   1) இறைவன் எல்லா உயிர்களுக்கும் எல்லா உலகங்களுக்கும் தலைவர் என்பதை குறிக்கும்.
   2) வரையறை இல்லாத அறிவுடைய பொருள் பதி
   3) பதி உண்மைப் பொருள் என்பதனை நிறுவ ஆகமப் பிரமாணத்தை மட்டும் துணையாக கொள்கிறது.
   4) பதிக்கு இரு நிலைகள் உண்டு
   5) பதி சத், சித், ஆனந்தம் எனும் இயல்புகளை உடையது.

48. மத்துவரது கோட்பாட்டுச் சிந்தனைகள்
   1) கேரளத்தில் உடுப்பிக்கு அருகில் உள்ள கிராமத்தில் பிறந்தவர்.
   2) கன்னடத்தில் ஹரிதாசர்களை உருவாக்கியமை
   3) பன்மை வாதி எனக் குறிப்பிடப்படுகின்றார்.
   4) பாகவத புராண விளக்கநூல் எழுதியமை
   5) ஐவகைப் பேதங்கள் பற்றி குறிப்பிடுகின்றார்.

agaram.lk

49. பொலநறுவைக்காலம் தொடர்பானது
   1) ஜனநாத மங்கலம் என அழைக்கப்பட்டது.
   2) இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், கட்டிடம், சிற்பம் தொல்பொருட்சின்னங்கள் மூலம் இக்கால இந்து சமய வளர்ச்சி பற்றி அறியலாம்.
   3) கந்தளாய், மண்டலகிரி, பதவியா, மாதோட்டம், திருகோணமலை போன்ற இடங்களில் இந்துசமய மரபுகள் வளர்ச்சியடைந்தன.
   4) இக்காலத்தில் 14 இந்துக் கோயில்கள் கண்டு பிடிக்கப்பபட்டன.
   5) திருக்கேதீஸ்வரத்தில் புதிய கோயில் அமைத்து அதற்கு ராஜராஜேஸ்வரம் எனப்பெயரிட்டனர்.

50. ஔவையாரின் ஆத்தி சூடி தொடர்பானது
   1) அஷ்டோத்திர நீதி நூல் என சிறப்பித்துக் கூறுவர்.
   2) தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் துளஜாப் பட்டினத்தில் ஔவைக்கு கோயில் அமைக்கப்பட்டுள்ளது.
   3) ஜே. சுதன் பாதிரியார் முதன் முதலில் பதிப்பித்து வெளியிட்டமை.
   4) நால்வகை புருடார்த்தங்களையும் எடுத்துக்கூறுவது.
   5) ஆத்திசூடியின் காப்புச் செய்யுள் விநாயகரைப் போற்றுகிறது.



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru
## 4th Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் II<br>Hindu Culture II | Three Hours<br>Gr -13 (2021) | 46 | T | II |

### பகுதி – II

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

01. இந்து நாகரிக வளர்ச்சியில் மகா புராணங்கள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை மேல்வரும் விடயங்களில் விளக்குக.
   - அ) பொருள்மரபு
   - ஆ) சமயநெறி
   - இ) தத்துவ மரபுகள்
   - ஈ) முக்கியத்துவம்

(5+5+5+5=20புள்ளிகள்)

02. சோழப்பெருமன்னர் காலத்தில் மேன்மையடைந்த விடயங்களை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
   - அ) அரசர்களது பங்களிப்பு
   - ஆ) கோயில்களும் நுண்கலை வளர்ச்சியும்
   - இ) பக்தி இலக்கியங்கள்
   - ஈ) வைணவ நெறியின் வளர்ச்சி

(5+5+5+5=20புள்ளிகள்)

03. சுவாமி விபுலானந்தர் இந்து சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் தொடர்பாக மேல்வரும் விடயங்களில் பரிசீலிக்குக.
   - அ) சமய பணிகள்
   - ஆ) கல்விப் பணிள்
   - இ) கலைப்பணிகள்
   - ஈ) சமூகப்பணிகள்

(5+5+5+5=20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

*04.* சங்கர வேதாந்தக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களை விளக்கிக்கூறுக.

(*20* புள்ளிகள்)

*05.* பல்லவர் காலக்கட்டடக்கலை வளர்ச்சியில் மன்னர்களின் பங்களிப்பை விளக்குக.

(*20* புள்ளிகள்)

*06.* இலங்கையில் திருக்கேதீச்சரத் திருத்தலத்தின் மூர்த்தி, தீர்த்த தலம் சிறப்புக்களை விளக்குக.

(20புள்ளிகள்)

*07.* சிவனது நடராஜ வடிவத்தின் தோற்றப் பொலிவினையும் அதன் சிறப்புக்களையும் விளக்குக.

(20புள்ளிகள்)

*08.* “பிரமசமாஜம் என்ற நவீன இந்து சீர்திருத்த இயக்கத்தின் வழி நின்று இந்து சமூகத்தை நெறிப்படுத்துவதில் சாதனை படைத்தவர்ராஜாராம் மோகன்ராய்” இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(*20* புள்ளிகள்)

agaram.lk



agaram.lk